## ஒரு பார்வை - பகுதி 1

**ஹிழ்ரு (அலை) தனது செயல்களுக்குப் பின்னால் உள்ள காரணங்களை விளங்குவதுடன் மூஸா (அலை) மற்றும் ஹிழ்ரு (அலை) பற்றிய வரலாறு முடிவடைகிறது. யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தாரின் குழப்பத்தை தடுக்க மன்னர் துல்கர்னைன் கட்டிய தடுப்பணை பற்றி விளக்கப்பட்டுள்ளது. ஜக்கரிய்யா (அலை) தமக்கு ஒரு குழந்தை வேண்டுமென்று அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்தது, அல்லாஹ் அவருக்கு யஹ்யா (அலை) அவர்களை கொடுத்தது இவற்றுடன் ஸூரா மர்யம் தொடங்குகிறது.**

## தராவிஹ் - 13: (ரக்அத் 1 முதல் 4)

### ஸூரா - 18, அல்கஹ்ஃப்; வசனம்: 75 - 110; பிரிவு: 10 - 12

1. **ஹிழ்ரு (அலை) ஒரு சிறுவனை கொன்றது, தகாத செயல் ஆகும் என்று மூஸா (அலை) சொன்னார்கள். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 10)**

2. **அதற்கு ஹிழ்ரு (அலை), "என்னுடன் பொறுமையாக உம்மால் இருக்கமுடியாது என்று நான் முன்பே சொல்லவில்லையா?" என்றார். அதற்கு நபி மூஸா (அலை) அவர்கள், "இனி நான் எதைப் பற்றியும் கேட்கமாட்டேன். அவ்வாறு நான் கேட்டால் என்னை இனிமேல் உம்முடன் வைத்துக் கொள்ள வேண்டாம்" என்று கேட்டுக்கொண்டார். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 10)**

3. **அவ்விருவரும் ஒரு கிராமத்திற்கு வந்து, தமக்கு உணவளிக்குமாறு அம்மக்களிடம் வேண்டினர். ஆனால் அவர்கள் மறுத்துவிட்டனர். அவ்வூரில் கீழே விழுந்துவிடும் நிலையிலிருந்த ஒரு சுவற்றை அவ்விருவரும் கண்டனர்.**

அதனை ஹிழ்ரு (அலை) சீர் செய்தார்கள். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 10)

4. அதனை பார்த்த மூஸா (அலை), "நீர் விரும்பினால் இதற்கான கூலியை கேட்டுப் பெற்றுக்கொள்ளலாமே" என்று கூறினார். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 10)

5. ஹிழ்ரு (அலை) அவர்கள், "இதுவே நாமிருவரும் பிரியவேண்டிய நேரம். எதைப் பற்றி நீர் பொறுமையாக இருக்க முடியவில்லையோ, அதன் விளக்கத்தை இப்போது நான் சொல்கிறேன்" என்று விவரிக்க ஆரம்பித்தார்கள். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 10)

6. அக்கப்பல் ஏழை மக்களுக்கு சொந்தமானது. நல்ல கப்பல்களை அபகரித்து வந்த கொள்ளையரிடமிருந்து அதைக் காப்பாற்றுவதற்காகவே அக்கப்பலை சேதப்படுத்தியதாக ஹிழ்ரு (அலை) கூறினார். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 10)

7. ஹிழ்ரு (அலை) கொன்ற அந்த சிறுவன் இறைநம்பிக்கை இல்லாதவனாகவும், அத்துமீறுபவனாகவும் இருந்தான். அவனுடைய பெற்றோர், நேர்மையான முஸ்லீம்களாவர். அவன் வளர்ந்து, பெற்றோரை வழிகெடுத்து விடுவான். ஆகையால் அல்லாஹ், அவனைவிட சிறந்த, பாசமான வேறொரு குழந்தையை அப்பெற்றோருக்கு வழங்குவான். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 10)

8. அந்தச் சுவர், இரு அனாதைச் சிறுவர்களுக்குரியது. அவர்களது தந்தை மிகவும் நல்ல மனிதர். அச்சுவற்றுக்கு கீழே புதையல் ஒன்றுள்ளது. அச்சிறுவர்கள் இருவரும் பருவ வயதை அடைந்து, அதை எடுத்துக்கொள்ளும் வரை அல்லாஹ் அதை பாதுகாக்க நாடியிருந்தான் என்று ஹிழ்ரு (அலை) கூறினார். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 10)

9. இது அல்லாஹ்வின் அருளாகும். இவை அனைத்தையும் ஹிழ்ரு (அலை) தானாக செய்யவில்லை. இதுவே மூஸா (அலை) பொறுமையுடன் இருக்க முடியாத நிகழ்வுகளுக்கான விளக்கமாகும். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 10)

10. (நபியே!) அவர்கள் துல்கர்னைனை பற்றி உங்களிடம் வினவுகின்றனர். "அவரைப் பற்றிய சில குறிப்புகளை நான் உங்களுக்கு எடுத்துக்கூறுகிறேன்" என்று நீர் கூறுவீராக! (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 11)

11. அல்லாஹ், அவருக்கு பூமியிலுள்ள அதிகாரங்களை வழங்கினான். அனைத்து விதமான வழிகளையும் கொடுத்தான். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 11)

12. ஒரு சமயம் அவர் மேற்கு நோக்கி பயணம் செய்த போது, அவ்விடத்தில் ஒரு சமூகத்தினரை கண்டார். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 11)

13. அம்மக்களிடம் அவர் கூறினார், "அநியாயம் செய்தவருக்கு கடுமையான வேதனை உண்டு. இறைநம்பிக்கை கொண்டு நல்ல செயல்களைச் செய்பவருக்கு அழகான நற்கூலி உண்டு". (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 11)

14. பின்பு அவர் கிழக்கு திசையை நோக்கி பயணம் செய்தார். அங்கு அவர் சூரியனிடமிருந்து பாதுகாக்கும் ஒரு தடுப்பு இல்லாமல் ஒரு சமூகம் இருப்பதைக் கண்டார். (ஒருவேளை அவர்கள் சரியான வீடு அல்லது உடை இல்லாமல் இருந்திருக்கலாம்). (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 11)

15. பின்பு அங்கிருந்து புறப்பட்டு இறுதியாக இரு மலைகளுக்கு நடுவில் உள்ள ஓர் இடத்தை அடைந்தார். அவற்றுக்கப்பால் ஒரு சமுகத்தாரைக் கண்டார். அவர்கள் எந்தப் பேச்சையும்

எளிதில் புரிந்து கொள்பவர்களாக இல்லை. (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 11)

16. அவர்கள் துல்கர்னைனிடம், “யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தார் இப்பகுதியில் குழப்பம் விளைவிக்கின்றனர். எனவே, எங்களுக்கும் அவர்களுக்குமிடையே ஓர் அடைப்பை ஏற்படுத்தினால் நாங்கள் ஒரு தொகையைத் தருகிறோம்” என்றனர். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 11)

17. அதற்கவர், “என் இறைவன் எனக்கு போதிய வசதியை அளித்துள்ளான். நீங்கள் உங்கள் ஆட்களைக் கொண்டு எனக்கு உதவி செய்யுங்கள். நான் உங்களுக்கும், அவர்களுக்குமிடையே ஓர் உறுதியான தடுப்பை ஏற்படுத்தி விடுகிறேன்” என்று கூறினார். மேலும் நீங்கள் இரும்புப் பாளங்களை எனக்குக் கொண்டு வாருங்கள்” என்றார். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 11)

18. பிறகு அந்த இரும்புப் பாளங்களை இரு மலைகளின் இடையே நிரம்பி உச்சிக்குச் சமமாகும் போது, ஊதி நெருப்பாக ஆக்கியதும், உருக்கிய செம்பை ஊற்ற செய்தார். இவ்வாறாக ஒரு தடுப்பணை (Dam) போல சுவர் உருவானது. (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 11)

19. எனவே, யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தாரால் அதன் மீது ஏறவும் முடியாது. அதில் துவாரமிடவும் முடியாது. (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 11)

20. துல்-கர்னைன்: "இது என் இறைவனிடமிருந்து வந்த ஒரு கருணையாகும். அல்லாஹ்வின் வாக்குறுதி (கியாமத் நாள்) வரும்போது, இந்த இரும்புப் பாலமானது சுக்கு நூறாய் நொறுங்கி தரையில் விழுந்து விடும்”. (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 11)

21. அந்த நாளில், இம்மக்கள் கடல் அலை போல ஒருவருடன் மற்றொருவர் மோதிக் கொள்வர். பின்னர், ஸூர் (எக்காளம்) ஊதப்படும். அப்போது நாம் அவர்களை ஒன்றுதிரட்டுவோம். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 11)

22. அந்நாளில் இறைமறுப்பாளர்களுக்கு நரகத்தை அவர்களுக்கு முன்னே நாம் காண்பிப்போம். அவர்கள் என் எச்சரிக்கையைக் கண்டுகொள்ளாதவர்களாகவும், செவிமடிக்காதவர்களாகவும் இருந்தனர். (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 11)

23. நபியே! அவர்களுக்கு நீர் கூறுவீராக! கடல் நீரையே மையாக பயன்படுத்தி அல்லாஹ்வின் வார்த்தைகளை எழுத முன்வந்தால், அவற்றை எழுதி முடிக்கும் முன் கடல் நீர் வற்றிவிடும். அது போன்று இன்னொரு கடலை கூடுதலாகக் கொண்டு வந்தாலும் சரியே! (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 12)

24. (நபியே!) நீர் சொல்வீராக! “நிச்சயமாக நான் உங்களைப் போன்ற ஒரு மனிதரே! எனினும் உங்களுடைய இறைவன் ஒரே இறைவன்தான், என்று எனக்கு வஹீ அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே, யார் தன்னுடைய இறைவனின் சந்திப்பை எதிர்பார்க்கிறாரோ, அவர் நல்ல செயல் செய்யட்டும். அவர் தன் இறைவனுக்குச் செய்யும் வணக்கத்தில் வேறு யாரையும் இணைவைக்காமல் இருக்கவேண்டும்”. (ஸூரா - அல்கஹ்ஃப்; பிரிவு: 12)

## ஸூரா - 19, மர்யம்; வசனம்: 1 - 15; பிரிவு: 1

25. காஃப், ஹா, யா, ஐன், ஸாத்! இது அல்லாஹ் தனது அடியாரான ஐக்கரிய்யா (அலை) அவர்களுக்கு வழங்கிய அருட்கொடை பற்றிய குறிப்பாகும். (ஸூரா - மர்யம்; பிரிவு: 1)

26. அவர் தமக்கு ஒரு குழந்தை வேண்டுமென்று அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்தார். அக்குழந்தையை தமக்கும், யஃகூபு (அலை) அவர்களுடைய குடும்பத்தாருக்கும் வாரிசாகவும்,

அல்லாஹ்வுக்கு நேசராகவும் ஆக்குமாறு வேண்டினார். (ஸூரா - மர்யம்; பிரிவு: 1)

27. அல்லாஹ், அவரின் பிரார்த்தனையை ஏற்று, ஓர் ஆண்குழந்தை பிறக்கப்போகும் நற்செய்தியைக் கூறினான். அவரின் பெயர் “யஹ்யா” ஆகும். (ஸூரா - மர்யம்; பிரிவு: 1)

28. யஹ்யாவுக்கு சிறு வயதிலேயே அல்லாஹ் ஞானத்தை வழங்கினான். மேலும் இரக்க குணத்தையும், தூய்மையான தன்மையையும் அவருக்கு வழங்கினான். (ஸூரா - மர்யம்; பிரிவு: 1)

29. யஹ்யா இறையச்சமுள்ளவராக வளர்ந்தார். பெற்றோரை பராமரிப்பவராகவும் இருந்தார். பெருமை அடிப்பவராகவோ, மாறுசெய்பவராகவோ அவர் இருக்கவில்லை. ஆகவே, அவர் பிறந்த நாளிலும், அவர் இறக்கும் நாளிலும், அவர் உயிர் பெற்றெழும் மறுமை நாளிலும் அவர் மீது ஸலாம் - சாந்தி - நிலவட்டும். (ஸூரா - மர்யம்; பிரிவு: 1)

## ஒரு பார்வை - பகுதி 2

**ஈஸா (அலை) அவர்களின் அற்புதப் பிறப்பைப் பற்றியும், அவர்கள் குழந்தையாக இருந்தபோது பேசியதும், தன்னை அல்லாஹ்வின் அடிமையாகவும், நபியாகவும் அறிவித்ததையும் விரிவாக கூறப்பட்டுள்ளது. சிலைகளை வணங்குவதை கைவிடுமாறு தனது தந்தைக்கு இப்ராஹீம் (அலை) உபதேசித்ததையும், அல்லாஹ் அவர்களுக்கு ஸாலிஹான சந்ததிகளை வழங்கியதையும் குறிப்பிடப்பட்டுள்ளது.**

## தராவிஹ் - 13: (ரக்அத் 5 முதல் 8)

### ஸூரா - 19, மர்யம்; வசனம்: 16 - 98; பிரிவு: 2 - 6

1. **(நபியே!) இவ்வேதத்தில் உள்ள மரியமைப் பற்றி எடுத்துரைப்பீராக! (ஸூரா - மர்யம்; பிரிவு: 2)**

2. **அவர் தம் குடும்பத்தினரை விட்டு நீங்கி, தனியாக இருக்கும்போது, நாம் அவரிடத்தில் ஜிப்ரீல் (அலை) அவர்களை அனுப்பினோம். அவர் மனித உருவில் அவருக்கு தோற்றமளித்தார். (ஸூரா - மர்யம்; பிரிவு: 2)**

3. **அவரைக் கண்டதும், "நிச்சயமாக நான் உம்மை விட்டும் ரஹ்மானிடம் காவல் தேடுகிறேன்" என்றார். அதற்கு, "பரிசுத்தமான ஒரு புதல்வரை உமக்கு நன்கொடை அளிப்பதற்காக உம்முடைய இறைவனால் அனுப்பட்ட தூதர் நான்", என்று கூறினார். (ஸூரா - மர்யம்; பிரிவு: 2)**

4. **"எந்த ஆண்மகனும் என்னை தீண்டவில்லை. நான் நடத்தை கெட்டவளும் அல்லவே. எனக்கு எப்படி குழந்தை பிறக்கும்?" என்று மர்யம் (அலை) கேட்டார். (ஸூரா - மர்யம்; பிரிவு: 2)**

5. “அது அப்படித்தான். அல்லாஹ், மனிதர்களுக்கு ஓர் அத்தாட்சியாகவும், தன்னிடமிருந்துள்ள அருளாக இருப்பதற்காகவே இவ்வாறு செய்துள்ளான். இது இறைவனால் விதிக்கப்பட்ட விஷயமாகும்”, என்று அந்த வானவர் பதில் சொன்னார். (ஸூரா - மர்யம்; பிரிவு: 2)

6. பிரசவ வேதனையானது, மர்யம் (அலை) அவர்களை ஒரு பேரிச்சமரத்தின் அடியில் கொண்டு வந்து சேர்த்தது. அப்போது அவர், “இதற்கு முன்பே நான் இறந்து, முற்றிலும் மறக்கப்பட்டவளாகி இருக்கக் கூடாதா?”, என்று புலம்பினார். (ஸூரா - மர்யம்; பிரிவு: 2)

7. வானவர் அவர்களை அழைத்து, “கவலைப்படாதே! உன் பாதத்துக்கடியில் நீரூற்றை அல்லாஹ் உற்பத்தி செய்துள்ளான். இம்மரத்தை உலுக்கினால் பழுத்த, தூய்மையான பேரிச்சம்பழம் விழும். ஆகவே அதனை சாப்பிட்டு (தண்ணீரை) குடித்து, புத்துணர்ச்சி பெற்றுக் கொள்” என்றார். (ஸூரா - மர்யம்; பிரிவு: 2)

8. மர்யம் (அலை) தான் பெற்றெடுத்த குழந்தையை மக்களிடம் கொண்டு சென்றார். அதை வினோதமாகப் பார்த்த அவர்கள் பல கேள்விகளை எழுப்பினர். (ஸூரா - மர்யம்; பிரிவு: 2)

9. அப்போது மர்யம் அக்குழந்தையை சுட்டிக் காட்டினார். அக்குழந்தை பேசியது: “நிச்சயமாக, நான் அல்லாஹ்வின் அடியான். எனக்கு வேதத்தைக் கொடுத்துள்ளான். என்னை நபியாக ஆக்கியுள்ளான். நான் எங்கிருந்தாலும் அருள்மிக்கவனாய் என்னை ஆக்கியுள்ளான். மேலும் தொழுகையை நிறைவேற்ற வேண்டுமென்றும், ஜக்காத்தை கொடுக்க வேண்டுமென்றும் உபதேசித்துள்ளான். என் தாய்க்கு நான் பணிவிடை செய்யவேண்டுமென்றும் அறிவுறுத்தியுள்ளான். பெருமையடிப்பவனாகவோ,

துர்பாக்கியசாலியாகவோ என்னை ஆக்கவில்லை". (ஸூரா - மர்யம்; பிரிவு: 2)

10. இவர் தான் மர்யமின் மகன் ஈஸா ஆவார். எது விஷயத்தில் சந்தேகத்துடன் விவாதம் புரிந்து கொண்டிருக்கிறார்களோ, அவற்றின் உண்மையான கூற்று இது தான். (ஸூரா - மர்யம்; பிரிவு: 2)

11. "நிச்சயமாக அல்லாஹ், என்னுடைய இறைவனும் உங்களுடைய இறைவனுமாவான். அவனையே வணங்குங்கள்", என்று ஈஸா (அலை) அறிவித்தார்கள். (ஸூரா - மர்யம்; பிரிவு: 2)

12. இவ்வேதத்தில் இப்ராஹீமைப் பற்றியும் நினைவு கூறுவீராக! நிச்சயமாக அவர் மிக்க உண்மையாளராகவும், நபியாகவும் இருந்தார். (ஸூரா - மர்யம்; பிரிவு: 3)

13. இப்ராஹீம் (அலை), "என் தந்தையே! கேட்கும் திறனும், பார்வைத் திறனுமில்லாத, எந்தத் பலனும் தர இயலாத ஒன்றை ஏன் நீங்கள் வணங்குகிறீர்கள்?" என்று வினவினார். (ஸூரா - மர்யம்; பிரிவு: 3)

14. "என் தந்தையே! எனக்கு இறைஞானம் வந்துள்ளது. எனவே, என்னைப் பின்பற்றுவீராக! அதன் மூலம் நேரான வழியை உங்களுக்கு காட்டுவேன்". (ஸூரா - மர்யம்; பிரிவு: 3)

15. "என் தந்தையே! ஷைத்தானை வழிபடாதீர்கள். அவன் அல்லாஹ்விற்கு மாறு செய்யக்கூடியவன். இறைவனின் வேதனை வந்துவிடும்; நீங்கள் ஷைத்தானின் கூட்டாளியாகி விடுவீர்கள் என்று நான் அஞ்சுகிறேன்". (ஸூரா - மர்யம்; பிரிவு: 3)

16. அதற்கு அவர்களின் தந்தை, “என் தெய்வங்களை நீ பழித்துப் பேசுகிறாயா? என் தெய்வங்களை பழித்துப் பேசுவதை உடனடியாக நிறுத்தவில்லை என்றால் உன்னை கல்லெறிந்து கொல்வேன். நீ போய் விடு”, என்று பதிலளித்தார். (ஸூரா - மர்யம்; பிரிவு: 3)

17. இப்ராஹீம் (அலை) தன் தந்தையிடம், “உங்களுக்கு - ஸலாம் - சாந்தி உண்டாகட்டும். உங்களுக்காக என்னுடைய இறைவனிடம் பாவமன்னிப்பு தேடுவேன். உங்களை விட்டும், நீங்கள் வணங்கும் கடவுள்களை விட்டும் நான் ஒதுங்கிக் கொள்கிறேன். (ஸூரா - மர்யம்; பிரிவு: 3)

18. அல்லாஹ், இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு வழித்தோன்றல்களாக இஸ்ஹாக்கையும், யஃகூப்பையும் அன்பளிப்பாக வழங்கினான். அவ்விருவரையும் நபியாக ஆக்கினான். குறிப்பிடத்தக்க உயர் ரக மரியாதையை அவர்களுக்கு வழங்கினான். (ஸூரா - மர்யம்; பிரிவு: 3)

19. இஸ்மாயில் (அலை) அவர்கள், தன் வார்த்தைகளில் உண்மையாளராக இருந்தார். தொழுகையை நிறைவேற்றவும், ஜகாத்தை வழங்க வேண்டுமென்றும் மக்களை ஏவினார். மேலும் அல்லாஹ், இஸ்மாயில் (அலை) அவர்களை மனப்பூர்வமாக பொருந்திக் கொண்டான். (ஸூரா - மர்யம்; பிரிவு: 4)

20. இத்ரீஸ் (அலை) அவர்கள் நம்பிக்கையான மனிதராகவும், நபியாகவும் இருந்தார். அல்லாஹ் அவர்களை அந்தஸ்தில் உயர்த்தினான். (ஸூரா - மர்யம்; பிரிவு: 4)

21. அவர்களிடம் இறை வசனங்கள் ஓதப்பட்டால், அவர்கள் அல்லாஹ்விற்கு ஸஜ்தா செய்தவர்களாக கீழே விழுவார்கள். <u>(ஸஜ்தா - 5).</u> (ஸூரா - மர்யம்; பிரிவு: 4)

22. ஆனால், இவர்களுக்குப் பின் வழி கெட்ட சந்ததியினர் இவர்களுடைய இடத்திற்கு வந்தார்கள். அவர்கள் தொழுகையை வீணாக்கினார்கள். இழிவான மன இச்சைகளைப் பின்பற்றினார்கள். மறுமையில் அவர்கள் நரகத்தைச் சந்திப்பார்கள். (ஸூரா - மர்யம்; பிரிவு: 4)

23. கியாமத் நாளில் அல்லாஹ், அவர்களையும், அவர்கள் வணங்கிய ஷைத்தான்களையும் ஒன்று கூட்டி, நரகத்தைச் சுற்றி முழங்காலிட்டவர்களாக கொண்டுவந்து நிறுத்துவான். (ஸூரா - மர்யம்; பிரிவு: 5)

24. அந்த நரகத்தை கடக்காமல் உங்களில் யாரும் போக முடியாது. இது உம்முடைய இறைவனின் முடிவான தீர்மானமாகும். (ஸூரா - மர்யம்; பிரிவு: 5)

25. அதன் பின்னர், பயபக்தியுடையோர்களை நாம் ஈடேற்றுவோம். ஆனால், அநியாயம் செய்தவர்களை முழந்தாளிட்டவர்களாக அதிலேயே விட்டு விடுவோம். (ஸூரா - மர்யம்; பிரிவு: 5)

26. ‘அல்லாஹ், தனக்கு ஒரு குழந்தையை ஏற்படுத்திக்கொண்டான்’ என்று அவர்கள் கூறுகின்றனர். இது எவ்வளவு அபாண்டமானதென்றால், இதனால் வானங்கள் வெடித்து, பூமி பிளந்து, மலைகள் இடிந்து சரிந்துவிடப் பார்க்கின்றன. (ஸூரா - மர்யம்; பிரிவு: 6)

27. நபியே! அல்லாஹ், இந்த குர்ஆனை உம்முடைய மொழியில் இலகுவாக ஆக்கியுள்ளான். ஏனெனில் பயபக்தி உடையவர்களுக்கு நீர் சுபச்செய்தி சொல்வதற்காகவும், தவறான பாதையில் செல்வோரை எச்சரிப்பதற்காகவும்தான். (ஸூரா - மர்யம்; பிரிவு: 6)

## ஒரு பார்வை - பகுதி 3

மூஸா (அலை) அவர்களை நபியாக்கி, ஃபிர்அவ்னிடம் செல்லுமாறு அல்லாஹ் அவர்களுக்கு கட்டளையிட்டான். மூஸா (அலை) அவர்கள் செய்த பிரத்தியேகமான துஆக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மூஸா (அலை) அவர்களுக்கும், ஃபிர்அவ்னுக்கும் இடையேயான உரையாடல்கள் மற்றும் மூஸா (அலை), சூனியக்காரர்களுக்கிடையேயான போட்டிகள் பற்றியும் விவரிக்கப்பட்டுள்ளது.

# தராவிஹ் - 13: (ரக்அத் 9 முதல் 12)

## ஸூரா - 20, தாஹா; வசனம்: 1 - 76; பிரிவு: 1 - 3

1. அல்லாஹ்விடம் உரக்கச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. நிச்சயமாக அவன் இரகசியத்தையும், மறைவானதையும் அறிகிறான். (ஸூரா - தாஹா; பிரிவு: 1)

2. மூஸா (அலை) அவர்களின் வரலாறு: அவர்கள் குடும்பத்துடன் பயணித்தபோது, வழியை தவறவிட்டார்கள். அப்போது தூரத்தில் நெருப்பொன்றைக் கண்டார்கள். (ஸூரா - தாஹா; பிரிவு: 1)

3. அவர் அந்த நெருப்பின் அருகே வந்தபோது, அல்லாஹ் மூஸா (அலை) அவர்களிடம் பேசினான்: "மூஸாவே! உனது காலணிகளை கழட்டுவீராக! நீர் “துவா” என்னும் பரிசுத்தமான பள்ளத்தாக்கில் இருக்கிறீர். (ஸூரா - தாஹா; பிரிவு: 1)

4. ‘நான் உம்மை நபியாக தேர்வு செய்துள்ளேன்’ என்று அல்லாஹ் கூறினான். (ஸூரா - தாஹா; பிரிவு: 1)

5. மூஸா (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட (முஃஜிஸா) அற்புதம் பற்றி அல்லாஹ் கூறுகிறான். அவரது கைத்தடியை

கீழே போடப்பட்டால் பாம்பாக மாறும். அதைக் கையில் எடுத்தால், மறுபடியும் கைத்தடியாக மாறிவிடும். (ஸூரா - தாஹா; பிரிவு: 1)

6. அவர் தம் கையை விலாப்புறம் சேர்த்து, பின்பு எடுத்தபோது, அது கலப்பற்ற, ஒளி மிக்க வெண்மையாக மாறியது. பின்பு இந்த அற்புதங்களுடன் மூஸா (அலை) அவர்களை ஃபிர்அவ்னிடம் செல்ல வேண்டுமென அல்லாஹ் கட்டளையிட்டான். (ஸூரா - தாஹா; பிரிவு: 1)

7. மூஸா (அலை) அல்லாஹ்விடம், 'என் இறைவா! எனக்கு என் நெஞ்சத்தை விரிவுபடுத்துவாயாக! என் பணியை எனக்கு நீ எளிதாக்குவாயாக! என் நாவிலுள்ள (திக்குவாய்) முடிச்சை அவிழ்ப்பாயாக! அப்போதுதான் அவர்கள் என் சொல்லை விளங்கிக் கொள்வார்கள். என் சகோதரர் ஹாரூனை எனக்கு உதவியாளராக ஆக்குவாயாக' என்று வேண்டினார்கள். (ஸூரா - தாஹா; பிரிவு: 2)

8. அல்லாஹ், அவரது கோரிக்கையை ஏற்றுக்கொண்டான். மூஸாவின் தாயார், தனது பச்சிளங்குழந்தையை பெட்டியில் வைத்து ஆற்றில் போட்ட போது, இறைவன் செய்த உதவியை நினைவு கூறுகிறான். (ஸூரா - தாஹா; பிரிவு: 2)

9. பிறகு அப்பெட்டி கரையை அடைந்ததும், பெட்டியிலுள்ள குழந்தையை ஃபிர்அவ்னுடைய குடும்பத்தாரால் தத்தெடுக்கச் செய்தான். (ஸூரா - தாஹா; பிரிவு: 2)

10. பின்னர் மூஸா (அலை) அவர்களின் சகோதரியின் மூலம், அல்லாஹ், அக்குழந்தையை பாதுகாக்கும் ஒரு பெண்மனியைப் பற்றி ஃபிர்அவ்னுடைய மனைவியிடம் அறிவிக்க வைத்தான். இவ்வாறே, மூஸாவை அவரின் தாயாரிடம் மீண்டும் சேர்த்துவைத்தான். . (ஸூரா - தாஹா; பிரிவு: 2)

11. இறை அத்தாட்சிகளுடன் ஃபிர்அவ்னிடம் செல்லுமாறு மூஸா (அலை) அவர்களுக்கும், ஹாரூண் (அலை) அவர்களுக்கும் அல்லாஹ் உத்தரவு பிறப்பித்தான். வரம்பு மீறிவிட்ட ஃபிர்அவ்னிடம் மென்மையாக பேசுமாறும், பனூ இஸ்ராயீல்களை வேதனை படுத்தாமல் தங்களுடன் அனுப்பி விடுமாறும் கேட்கச் சொன்னான். (ஸூரா - தாஹா; பிரிவு: 2)

12. அவ்விருவரும் அவ்வாறே சென்று ஃபிர்அவ்னிடம் அச்செய்தியைக் கூறினர். அதற்கு அவன், “மூஸாவே! உங்கள் இருவரின் இறைவன் யார்?” என்று கேட்டான். “ஒவ்வொரு படைப்புக்கும் அதற்கேற்ற இயற்கையை வழங்கி, பின்னர் வழிகாட்டுகின்றவன்தான் எங்கள் இறைவன்” என்று கூறினார்கள். (ஸூரா - தாஹா; பிரிவு: 2)

13. மூஸா (அலை) தனக்கு வழங்கப்பட்ட அற்புதங்களை காண்பித்த போது, ஃபிர்அவ்ன், அதனை மாயாஜாலம் என்று சொன்னான். “மூஸாவே! எங்களை நாட்டை விட்டு வெளியேற்றுவதக்குத்தானே நீர் வந்துள்ளீர்?” என வினவினான். (ஸூரா - தாஹா; பிரிவு: 3)

14. ஃபிர்அவ்ன் சூனியத்தை வைத்து ஒரு போட்டி வைப்போம் என மூஸா (அலை) அவர்களிடம் சபதம் செய்தான். பண்டிகை நாளன்று அந்நாட்டு மாயாஜால வித்தைக்காரர்களுக்கும் மூஸாவிற்குமிடையே போட்டி நடைபெறும் என முடிவு செய்யப்பட்டது. (ஸூரா - தாஹா; பிரிவு: 3)

15. அந்நாளில் மூஸா (அலை) அவர்கள் வந்தார்கள். வித்தைக்காரர்கள் அவர்களின் ஜாலத்தை காண்பித்தார்கள். அவர்கள் கீழே போட்ட தடியும், கயிறும் நெழிய ஆரம்பித்தன. (ஸூரா - தாஹா; பிரிவு: 3)

16. ‘பயப்பட வேண்டாம்’ என்று அல்லாஹ், மூஸாவைத் தேற்றினான். மூஸா தனது தடியை கீழே போட்ட போது, அது பாம்பாக மாறி அங்கே காண்பிக்கப்பட்ட அனைத்து வித்தைகளையும் விழுங்கிவிட்டது. (ஸூரா - தாஹா; பிரிவு: 3)

17. உண்மையை உணர்ந்துகொண்ட அந்த சூனியக்காரர்கள் அனைவரும் ஸஜ்தாவில் விழுந்தனர். “மூஸா மற்றும் ஹாரூண் ஆகியோரின் இறைவனை நாங்கள் ஈமான் கொண்டு விட்டோம்” என்றனர். (ஸூரா - தாஹா; பிரிவு: 3)

18. ஃபிர்அவ்ன் ஆத்திரமடைந்து, “உங்களை மாறு கால், மாறு கை வாங்குவேன். உங்களை கழுமரத்தில் ஏற்றுவேன்” என்று சொன்னான். (ஸூரா - தாஹா; பிரிவு: 3)

19. ‘கண்கூடாகக் கண்ட அத்தாட்சிகளையும், எங்களைப் படைத்தவனையும் விட்டுவிட்டு ஃபிர்அவ்னை நாங்கள் ஒருபோதும் தேர்ந்தெடுக்க மாட்டோம்’, என அந்த வித்தகர்கள் பதிலளித்தனர். (ஸூரா - தாஹா; பிரிவு: 3)

20. ஃபிர்அவ்னால் இவ்வுலகில் மட்டும்தான் ஏதாவது செய்யமுடியும். அல்லாஹ்தான் சிறந்தவனும் நிலையானவனும் ஆவான். (ஸூரா - தாஹா; பிரிவு: 3)

## ஒரு பார்வை - பகுதி 4

**மூஸா (அலை) வரலாற்றின் தொடர்ச்சியாக, அல்லாஹ் அவர்களுடைய மக்களை கடலின் ஒரு பாதையில் அழைத்துச் செல்லும்படி உத்தரவிட்டான். மூஸா (அலை) மற்றும் அவர்களது மக்களை பின்தொடர்ந்து சென்றபோது ஃபிர்அவ்னும், அவனது படையும் கடலில் மூழ்கி இறந்தனர். ஸாமிரீ ஒரு காளைக் கன்றை உருவாக்கி மக்களை வழிபடச்செய்ததையும், மூஸா (அலை) அதை எவ்வாறு முறியடித்தார்கள் என்பதையும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. ஷைத்தான், ஆதம் (அலை) மற்றும் அவர்களது மனைவியிடம் ஆசை வார்த்தைகள் கூறி ஏமாற்றி, தடுக்கப்பட்ட மரத்தின் கனிகளை உண்ணச்செய்ததையும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.**

## தராவிஹ் - 13: (ரக்அத் 13 முதல் 16)

### ஸூரா - 20, தாஹா; வசனம்: 77 - 135; பிரிவு: 4 - 8

1. **தன்னுடைய அடியார்களை இரவில் அழைத்துச் சென்று அவர்களுக்கு கடலிலே ஈரம் காய்ந்த பாதையை ஏற்படுத்தித் தரவும், பயம் இல்லாமல் இருக்கவும், அல்லாஹ், மூஸா (அலை) அவர்களுக்கு வஹீ அறிவித்தான். (ஸூரா - தாஹா; பிரிவு: 4)**

2. **ஃபிர்அவ்ன், தன்னுடைய படையோடு மூஸா (அலை) அவர்களை பின் தொடர்ந்தான். கடல் நீர் அவர்களை முழுமையாக மூழ்கடித்து விட்டது. (ஸூரா - தாஹா; பிரிவு: 4)**

3. **மூஸா (அலை) தூர் ஸினாய் மலைக்குச் சென்றார். “நீர் சென்ற பிறகு, உம்மக்களை சோதனைக்குள்ளாக்கி விட்டோம். ஸாமிரீ என்பவன் அவர்களை வழி கெடுத்து விட்டான்” என்று அல்லாஹ் அறிவித்தான். (ஸூரா - தாஹா; பிரிவு: 4)**

4. மூஸா (அலை) அவர்கள் கடும் கோபத்துடனும், வருத்தத்துடனும் திரும்பி வந்து அம்மக்களிடம் கேட்டார்கள். அதற்கு அவர்கள், 'ஸாமிரீ, தங்களுடைய அணிகலன்களை நெருப்பில் போடச் சொல்லி வற்புறுத்தினான் என்றும், பிறகு அவற்றை சப்தமிடும் காளைக் கன்றாக அவன் உருவாக்கினான்' என்றும் பதிலளித்தனர். (ஸூரா - தாஹா; பிரிவு: 4)

5. ஸாமிரீ கூறுகிறான், "இது தான் உங்களுடைய இறைவன். இதுவே மூஸாவின் இறைவன். ஆனால் மூஸா இதை சொல்ல மறந்து விட்டார்". 'ஆனால் அந்த காளைக் கன்றுக்கு பதில் தர இயலாது. நன்மையை செய்யவோ, தீமை செய்யவோ சக்தியற்றது என்பதை அம்மக்களுக்கு புரியவில்லையா?' என அல்லாஹ் வினவுகிறான். (ஸூரா - தாஹா; பிரிவு: 4)'

6. மூஸா (அலை) இது பற்றி ஸாமிரீயிடம் கேட்டார்கள், அதற்கு அவன், "வானவர் ஜிப்ரயீல் (அலை) கடலை கடக்கும் நேரத்தில் அவரது பாதஅடி மணலை எடுத்து, மாட்டு உருவத்திற்குள் புதைத்தேன்" என்று பதில் சொன்னான். (ஸூரா - தாஹா; பிரிவு: 5)

7. மூஸா (அலை) அவனைச் சபித்து விட்டு, "என்னைத் தொடாதே! என மக்களிடம் சொல்லிக்கொண்டே நீ வெளியேறி விடு" என்றார்கள். (ஸூரா - தாஹா; பிரிவு: 5)

8. பிறகு மூஸா (அலை), அம்மாட்டை எரித்து அதன் சாம்பலை கடலில் கரைத்து விட்டார்கள். (ஸூரா - தாஹா; பிரிவு: 5)

9. பின்பு மூஸா (அலை) தன் மக்களிடம், "உங்களுடைய இறைவன் அல்லாஹ் ஒருவன்தான். அவனைத் தவிர வணக்கத்திற்குரிய இறைவன் வேறில்லை. அவனது அறிவு எல்லாப் பொருட்களிலும் விசாலமானது", என்று கூறினார்கள். (ஸூரா - தாஹா; பிரிவு: 5)

10. திருக்குர்ஆனின் அறிவுரைகளை யார் புறக்கணிக்கிறாரோ, அவர் கியாம நாளில் பாவச் சுமையைச் சுமப்பார். (ஸூரா - தாஹா; பிரிவு: 5)

11. ஸூர் ஊதப்படும் நாளில் பாவிகள், பயத்தால் நீலம் பூத்துப் போனவர்களாக எழுப்படுவார்கள். பத்து நாட்கள்தான் பூமியில் தங்கியிருந்தோம், என்று அவர்கள் தங்களுக்கிடையில் இரகசியம் பேசிக் கொள்வார்கள். ஒரு நாள் மட்டுமே என்று, சரியாக கணிப்பவர் கூறுவர். (ஸூரா - தாஹா; பிரிவு: 5)

12. மேலும் அந்நாளில் மலைகள் சுக்குநூறாக நொறுங்கி தூசுபோல் ஆகிவிடும். பூமி சமதளமாக ஆகிவிடும். (ஸூரா - தாஹா; பிரிவு: 6)

13. அந்நாளில் அழைப்பவரை பின்பற்றி மக்கள் செல்வார்கள். அதில் எந்தக் கோணலும் இருக்காது. அர்ரஹ்மானுக்கு அஞ்சி எல்லாச் சப்தங்களும் ஒடுங்கி விடும். மெதுவான காலடி சப்தத்தை தவிர வேறு எதையும் நீர் கேட்க மாட்டீர். (ஸூரா - தாஹா; பிரிவு: 6)

14. அல்லாஹ்வுக்கு முன் முகங்கள் பணிந்து தாழ்ந்துவிடும். அக்கிரமத்தைச் சுமந்தவர் இழப்புக்களாவார். இறைநம்பிக்கை கொண்டு, நற்செயல் செய்தவர், தமக்கு அநியாயம் செய்யப்படுமென்றோ, தமக்குரிய நற்கூலி குறைந்துவிடுமென்றோ பயப்படமாட்டார். (ஸூரா - தாஹா; பிரிவு: 6)

15. ‘நீங்கள் ஆதமுக்கு சிரம்பணியுங்கள்’ என்று அல்லாஹ் வானவர்களுக்கு கூறியபோது, இப்லீஸைத் தவிர அவர்கள் அனைவரும் சிரம் பணிந்தார்கள்.

16. **அல்லாஹ், ஆதம் (அலை) அவர்களிடம், 'ஆதமே! ஷைத்தான் உமக்கும், உம்மனைவிக்கும் விரோதியாவான். உங்களிருவரையும் சுவனத்திலிருந்து வெளியேற்றிவிட அவனுக்கு இடம் தந்துவிடவேண்டாம்' என அவர்களை எச்சரிக்கை செய்தான்.**

17. **"மரணமே ஏற்படாமல் நிரந்தரமாக சுவனத்தில் தங்குவதற்கு காரணமான ஒரு மரத்தை உங்களுக்கு நான் காட்டுவேன்", என்று ஆதமிடமும் அவரது மனைவியிடமும் ஷைத்தான் ஆசைவார்த்தைகள் கூறினான். (ஸூரா - தாஹா; பிரிவு: 7)**

18. **அவ்விருவரும் தடுக்கப்பட்ட மரத்தின் கனிகளை உண்டனர். அதனால் அவர்களது மறைவிடம் வெளிப்படத் துவங்கியது. சுவர்க்கத்தின் இலைகளால் அவற்றை மறைக்க முற்பட்டனர். (ஸூரா - தாஹா; பிரிவு: 7)**

19. **அல்லாஹ் அவர்களுக்கு பாவமன்னிப்பு வழங்கினான். அங்கிருந்து பூமிக்கு இறங்குமாறு உத்தரவிட்டான். அப்போது அல்லாஹ் கூறினான்: "உங்கள் சந்ததிகளில் சிலருக்குச் சிலர் பகைவர்களாகவே இருப்பார்கள். நிச்சயமாக என்னிடமிருந்து உங்களுக்கு நேர்வழி வரும்". (ஸூரா - தாஹா; பிரிவு: 7)**

20. **அல்லாஹ் சிலரை சுகபோகமாக வாழவைத்திருப்பதைப் பார்த்து அவற்றில் கவனம் செலுத்தாதீர். அல்லாஹ், அவற்றின் மூலம் அவர்களை சோதிப்பான். (ஸூரா - தாஹா; பிரிவு: 8)**

21. **(நபியே!) உம் குடும்பத்தினரைத் தொழுது வருமாறு ஏவுவீராக! (தொழுகையின் மீது) நீர் பொறுமையைக் காப்பீராக! நாம் உம்மிடம் உணவு கேட்கவில்லை. நாம்தான் உமக்கு உணவளிக்கிறோம். பயபக்தியுடையோருக்குத் தான் முடிவு சாதகமாக இருக்கும். (ஸூரா - தாஹா; பிரிவு: 8)**

## ஒரு பார்வை - பகுதி 5

**குர்ஆன் மக்களுக்கு தேவையான விஷயங்களைக் கொண்டுள்ளது. அது உங்களைப் போன்ற மனிதரான ஒரு நபிக்கு அனுப்பப்பட்டுள்ளது. அல்லாஹ் அன்றி வேறு தெய்வங்கள் இருந்திருந்தால் வானங்கள், பூமி ஆகியவை சீர்குலைந்து போயிருக்கும். ஒவ்வொரு ஆன்மாவும் மரணத்தை சுவைத்தே தீரும். ஒரு கடுகு விதை போல் சிறிய செயலாக இருந்தாலும், கியாமத் நாளில் அவற்றை அல்லாஹ் கணக்கில் கொண்டு வந்து, அனைவரையும் பொறுப்பேற்கச் செய்வான்.**

## தராவிஹ் - 13: (ரக்அத் 17 முதல் 20)

### ஸூரா - 21, அல்அன்பியா; வசனம்: 1 - 50; பிரிவு: 1 - 4

1. **இந்த குர்ஆனில் உங்களைப் பற்றிய குறிப்பு இருக்கிறது. அவற்றை நீங்கள் விளங்கிக் கொள்ள வேண்டாமா? (ஸூரா - அல்அன்பியா; பிரிவு: 1)**

2. **வானங்களிலும், பூமியிலும் உள்ள அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது. மேலும் அவனிடம் இருக்கும் வானவர்கள் அவனை வணங்காமல் பெருமையடிக்க மாட்டார்கள். சோர்வு அடையவும் மாட்டார்கள். அவர்கள் ஓய்வின்றி இரவும், பகலும் அவனை தஸ்பீஹ் செய்து கொண்டிருப்பார்கள். (ஸூரா - அல்அன்பியா; பிரிவு: 2)**

3. **அல்லாஹ் அன்றி வேறு தெய்வங்கள் இருந்திருந்தால் வானம், பூமி இரண்டுமே சீர்குலைந்து போயிருக்கும். (ஸூரா - அல்அன்பியா; பிரிவு: 2)**

4. **(நபியே!) உமக்கு முன்னர் எந்த மனிதனுக்கும், என்றென்னும் இருக்கக்கூடிய நித்திய வாழ்வை கொடுக்கவில்லை. ஆகவே**

நீர் மரணித்தால் அவர்கள் மட்டும் என்றென்றும் வாழப் போகிறார்களா? (நபி (ஸல்) அவர்களுக்கு இறப்பு நெருங்கிவிட்ட செய்தியை வானவர் ஜிப்ரீல் (அலை) கூறியபோது இந்த வசனம் அருள்பெற்றது). (ஸூரா - அல்அன்பியா; பிரிவு: 3)

5. ஒவ்வொரு ஆன்மாவும் மரணத்தை சுவைத்தே தீரும். அல்லாஹ் உங்களை சோதிக்கும் விதமாக நல்லவற்றையும், தீயவற்றையும் உங்களுக்குக் கொடுப்பான். இறுதியாக நீங்கள் அவன் பக்கமே திரும்புவீர்கள். (ஸூரா - அல்அன்பியா; பிரிவு: 3)

6. கியாமத் நாளில் நியாயமான தராசு அமைக்கப்படும். எந்தவொரு உயிருக்கும் அநீதி இழைக்கப்படாது. (ஸூரா - அல்அன்பியா; பிரிவு: 4)

7. (நன்மையோ, தீமையோ) ஒரு கடுகு வித்தளவு இருந்தாலும் அவற்றை அல்லாஹ் கணக்கில் கொண்டு வருவான். கணக்குத் தீர்ப்பதில் அல்லாஹ்வே போதுமானவன். (ஸூரா - அல்அன்பியா; பிரிவு: 4)

---------------------------------------------------------------